# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1
Date : 04.03.2026
Case No. : O.S. 54/2024
Nationality : Indian
Name : பன்னீர்செல்வம்
Religion :
Father's/Husband's Name : கிருஷ்ணமூர்த்தி
Age : 64
Village : திருவிடைமருதூர்
Taluk : திருவிடைமருதூர்

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் வழக்கின் வாதி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 31.03.2006 தேதியிட்ட வாதியின் தாயார் நாகரெத்தினத்தின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.03.2010 ம் தேதியிட்ட வாதியின் தகப்பனார் கிருஷ்ணமூர்த்தியின் வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.02.2016 தேதியிட்ட வாதியின் சகோதரி கற்பகம் காணாமல் போனது தொடர்பாக திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் சகோதரி கற்பகம் காணாமல் போனது தொடர்பாக காவல் நிலையத்தில் கொடுத்த காவல்துறை அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.03.2022 தேதியிட்ட வாதியின் சகோதரர் அருளப்பன் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி மற்றும் வாதியின் சகோதரர் கற்பகம் குடும்பத்துடன் வசித்து வந்த திருவிடைமருதூர் முகவரிக்கான குடும்ப அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுபடி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது உடன் பிறந்த சகோதரி கற்பகம் கடந்த 13.12.2014 ம் தேதி காணாமல் போய்விட்டார். அதற்காக சிவில் டெத் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். எனது பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் அருளப்பன். ஒரு சகோதரிதான் கற்பகம். எனது சகோதரர் திருமணம் ஆகி விவாகரத்து பெற்றுவிட்டு வாரிசுகள் இன்றி தற்போது இறந்துவிட்டார். எனது தங்கைக்கும் திருமணம் நடைபெறவில்லை. எனது தங்கை காணாமல் போகும்போது 35 வயதிருக்கும். எனது தங்கை காணாமல் போனது சம்மந்தமாக திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் 18.12.2014 ம் தேதி புகார் எனது தம்பி அருளப்பன் கொடுத்தார். அதன் பின்னிட்டு 03.02.2016 ம் தேதி புகார் கொடுத்துள்ளோம். போலிசார் விசாரித்தார்கள். எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதை தற்போது எனது பெயருக்கு மாற்ற வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரத்தை எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்புடையதல்ல என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு

தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).